**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 6-8-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## போலியான பணிநியமன ஆணை: தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நிர்வாகம் எச்சரிக்கை

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் நிரந்தர / தற்காலிக வேலைவாய்ப்புபோலி பணி நியமன ஆணை வழங்கி இளைஞர்களை ஏமாற்றி மோசடி நடந்து வருவது தெரியவந்துள்ளது. இது குறித்து பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்கும்படி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

கடந்த திங்கள் கிழமை (1-8-2016) அன்று மாலை 3 மணி அளவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக கட்டுப்பாட்டில் உள்ள தனி அலுவலர் (கண்காணிப்பு மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள்) அலுவலகத்திற்கு திரு. மா. செந்தில்வேல் என்னும் நபர் (தொலைபேசி எண் - 89737 69893), தான் உடுமலைப்பேட்டை அருகில் உள்ள வெங்கிட்டாபுரம் எனும் கிராமத்திலிருந்து வருவதாகவும் வேளாண் பல்கலைக்கழகத்தில், வேளாண் தகவல் பணியாளர் என்று பணி நியமனம் செய்யப்பட்டு இருப்பதாகவும், அப்பணியில் சேரவே

வந்திருப்பதாகவும் கூறி தான் கொண்டு வந்திருந்த பணி நியமன ஆணையையும் காண்பித்தார்.

இது முற்றிலும் போலி ஆணையாகும். இது போன்ற பதவி ஏதும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இல்லை என்பதோடு, இவ்வாறான பணி நியமன ஆணை ஏதும் பல்கலைக்கழகத்தின் மூலம் பிறப்பிக்கப்படவில்லை.

இது தொடர்பாக, போலி நியமன ஆணை பிறப்பித்தவர்களை கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்க கோரி பல்கலைக்கழகம் சார்பில் காவல்துறையிடம் புகாரும் கொடுக்கப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் இது போன்ற போலியான நபர்களின் தூண்டுதலுக்கு ஆளாகி ஏமாற வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறது.

போலி நியமன ஆணை இணைக்கப்பட்டுள்ளது.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்